## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.35/2023

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மணி | மதம் | : இந்து |
| த/பெ | : பொன்னுசாமி | ஜாதி | : -- |
| வயது | : 57 | கிராமம் | : திருத்தணி |
| தொழில் | : பொறியாளர் இந்திய விமானப்படை | வட்டம் | : திருத்தணி |

**19.01.2026**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பப்பட்டு 7, 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

4. நான் என்ன புல எண்ணிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 307/6 ஆகும். நான் அந்த ஒரு புல எண்ணிற்குதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். சொத்து என்னுடையது என்பதை காட்ட என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் வீட்டு வரி ரசீது, மின் கட்டண ரசீதுகள், பி மெமோ ரசீது, ஆக்கிரமிப்பு செய்ததற்கு தரை வரி கட்டிய ரசீது ஆகியவை தாக்கல் செய்துள்ளேன். பி மெமோ என்பது என் உரிமைக்கான ஆவணமா என்றால் அரசிலிருந்து கொடுத்ததாகும். அரசு இடத்தில் அத்துமீறி அனுபவித்ததை அப்புறப்படுத்த வேண்டி கொடுக்கப்படும் அறிவிப்பு என்றால் நான் குடிசை வீடு கட்டியதற்காக அதை கொடுத்தார்கள்.

5. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 1ல் என்ன சொல்லப்பட்டுள்ளது என்றால் **"கவர்மெண்டாருடைய சொத்தாகிய நிலத்தை நீர் அனுமதியின்றி அனுபவத்தில் வைத்துக் கொண்டிருப்பதாக தெரியவருவதால்"** என சொல்லப்பட்டுள்ளது. பி மெமோ என்பது அரசு நிலத்தில் அத்துமீறி குடியிருப்பவரை வெளியேற்ற கொடுக்கப்பட்ட ஆவணம் என்றாலும் அது உரிமை ஆவணம் ஆகாது என்றாலும் அதன் தொடர்ச்சியாக நான் பெற்றுள்ள வீட்டு வரி ரசீது, மின் கட்டண ரசீது ஆகியவை சட்டப்படி செல்லாது என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தான புல

எண்.307/6 ஆனது பாறை புறம்போக்கு என்றாலும் அதில் நான் எந்த உரிமையும் கோரமுடியாது என்றாலும் சரியல்ல. தேவையில்லாமல் இந்த வழக்கில் 7, 8 பிரதிவாதிகளை சேர்த்துள்ளேன் என்றாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)